திறந்து வைத்ததற்கு என்னுடைய தொகுதி வாழ் மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய மனுக்கள் பெற்றுக் கொள்ளப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த வீடுகளைப் பொறுத்தவரையில் கிராமப்பகுதியாக இருக்கிற போளூரில் ஹவுசிங் போர்டு மூலம் கட்டப்பட்ட வீடுகளுடைய விலை மதிப்பீடு அதிகமாக இருப்பதாக எங்களுடைய பகுதி மக்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்த மதிப்பீட்டிலே அரசு துறை மூலம் கொஞ்சம் குறைத்து வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கட்டப்படுகிற வீடுகளுடைய மதிப்பீடுகளைக் குறைத்து தருவதற்கு எந்தவிதமான சாத்தியக்கூறுகளும் கிடையாது.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்படுகிற வீடுகளை விலை குறைத்து தருவதற்கு வாய்ப்பு இல்லையென்று சொல்லி இருக்கிறார்கள். இந்த வீடுகளை பொறுத்தவரையில் நீர் தேங்கக்கூடிய, கசிவுத் தன்மை வரக்கூடிய அளவுக்கு பள்ளமான இடத்தில் கட்டி இருக்கிறார்கள். அரசு துறை மூலம் கட்டப்பட்ட வீடுகளை மூன்று ஆண்டுகளாகியும் இன்னும் மக்கள் பயன்படுத்தாமல் இருக்கிறார்கள். இதனால் அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிற வாய்ப்பு இருக்கிறது. இதைக் கருத்திற்கொண்டு மீண்டும் அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியத்தில் ஒரு இடத்தைத் தேர்வு செய்து வீடுகளைக் கட்டுவதற்கு முன்னாலே திட்டமிட்டு அந்த வீடுகளுக்கு என்ன செலவாகும் என்பதைப் பார்த்து ஹட்கோ நிறுவனத்திடமிருந்து கடனாகப் பெற்றுதான் வீடுகளைக் கட்டுகிறார்கள். எனவே ஹட்கோவிடமிருந்து நிதியுதவிப் பெற்று கட்டப்படுகிற வீடுகள், அவற்றை விற்று வருகிற தொகையிலிருந்து மீண்டும் திரும்ப செலுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே வீட்டு வசதி வாரியம் அந்த வீடுகளுடைய தொகையைக் குறைக்குமேயானால் தன்னுடைய கையிலிருந்துதான் ஹட்கோவிற்கு பணத்தை கட்டியாக வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலை இன்றைக்கு வீட்டுவசதி வாரியத்தில் இல்லை.

1995 நவம்பர் 10]

முற்பகல் *10.30*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 87, திரு. ஆர். பி. பரமசிவம், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

87—

சென்னை கடற்கரை-லஸ் துரித இரயில் திட்டம்

**39005*—திரு. ஆர். பி. பரமசிவம்:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கடற்கரை-லஸ் துரித இரயில் திட்டத்தை *1994-95*-ஆம் நிதியாண்டிற்குள் முடிக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விரைவில் துவங்க வலியுறுத்தியுள்ளது.

(ஆ) சென்னை கடற்கரை-லஸ் துரித இரயில் திட்டம் தற்போது *75%* முடிவடைந்துள்ளது. சேப்பாக்கம் வரையிலான பகுதி விரைவிலே இயங்கவுள்ளது. லஸ் வரையிலான பகுதி *1996*-ஆம் ஆண்டிற்குள் முடிக்க வேணடுமென குறிக்கோள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தேவையான நிதி ஒதுக்கீடு மத்திய அரசிடமிருந்து கிடைக்காததால் இத்திட்டம் முழுவதும் முடிவதில் காலதாமதம் ஏற்படுகிறது. இத்திட்டத்திற்குத் தேவையான பெரும்பான்மையான நிலங்களை தமிழக அரசு இரயில் துறைக்கு அளித்துள்ளது. மீதியான சில பகுதிகளையும் மாற்றித்தர மாநில அரசு துரித நடவடிக்கை எடுத்து வருகிறது.